II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE

**LAOP.127 of 2004**

Deposition of witness for the Respondent / RW1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 13.02.2026

| | | | |
|---|---|---|---|
| Name | : V.Natarajan | Age | : |
| Father's / Husband's Name | : | Village | : |
| Taluk | : | Distict | : |

<u>கோரிக்கையாளர் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

நான் சிவில் இன்ஜீனியரோ ஸ்டக்சுரல் இன்ஜீரியரோ அல்ல என்றால் சரிதான். 2000ம் ஆண்டில் நான் அரசு பணியில் சேரவில்லை. எனது ஊர் பெரியபாளையம் கிராமம் ஆகும். 2000ம் ஆண்டு பிரிவு 4ன் படியான அறிவிப்பு கொடுக்கப்பட்டபோது சென்னை – திருள்ளூர் சாலை மாநில நெடுஞ்சாலையாக இருந்தது என்றால் எனக்கு தெரியாது. தேசிய நெடுஞ்சாலை 205, 2000ம் ஆண்டில் 4 வழி சாலையா இருந்தது என்றால் எனக்கு தெரியாது. தற்போது அது 6 வழி சாலையாக மாற்றபட்டுவருகிறது என்றால் தெரியாது. தற்போது எங்கள் அலுவலகம் கோயம்பேட்டில் உள்ளது. என் வீட்டில் இருந்து அலுவலகத்திற்கு MTH ரோடு வழியாக தான் செல்வேன் என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் கோரிக்கையாளரின் மருத்துவமனை கட்டிடம், பணியாளர் குடியிருப்பு, மருந்தகம், ஆய்வகம், உணவகம், சுற்று சுவர் மற்றும் கதவு ஆகியவை அந்த இடத்தில் இருந்தது என்பதை நாங்கள் மறுக்கவில்லை என்றால் சரிதான். கோரிக்கையாளர் தனது உரிமை கோரும் மனு பத்தி 16ல் குறிப்பிட்டுள்ள மருத்துவமனை சிறப்பு வசதிகளை நாங்கள்

மறுக்கவில்லை. 1986ம் ஆண்டைய கோ.ம.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் 21 செண்ட் நிலத்திற்கு ரூ.36,750/- கிரைய தொகையாகவும் 1986ம் கோ.ம.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் 23 செண்ட் நிலத்திற்கு ரூ.40,250/- கிரைய தொகையாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அசல் ஆவணங்களை பார்த்து தான் சொல்ல முடியும். (சாட்சியிடம் ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள் காட்டப்பட்டது) பட்டாபி ராம் மற்றும் திருநின்றவூர் ரயில் நிலையங்களில் இருந்து நெமிலிசேரி கிராமம் 1.5 கி.மீ சம தூரத்தில் உள்ளது என்றால் சரியல்ல. திருநின்றவூர் ரயில் நிலையத்தில் இருந்து 3 கி.மீ தூரம் இருக்கும். பட்டாபிராம் ரயில் நிலையத்தில் இருந்து 1.5 கி.மீ தூரம் இருக்கும். திருநின்றவூர், ஆவடி, சென்னையில் இருந்து வரும் 71E. 572, 580 போன்ற மாநகர பேருந்துகள் நெமிலி சேரி வழயாக செல்லும் என்றால் சரிதான். அதேபோல் 72D, 97 திருத்தணி, திருவள்ளூர் போன்ற இடங்களில் இருந்து வரும் வெளியூர் பேருந்துகளும் நெமிலிசேரியில் நின்று செல்லும் என்றால் எனக்கு தெரியாது. கோரிக்கையாளரின் கிரேஸ் மருத்துவமனை நெடுஞ்சாலையை ஒட்டி அமைந்திருந்தது என்றால் எனக்கு தெரியாது. கோ.சா.ஆ.9 ஆனது Chief Project Manager GMR, Chennai ORR Pvt., Ltd., and DRO (land Acquisation) ORR Project CMDA ஆகியோரால் கையொப்பமிட்டு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த நிலம் திருவள்ளூல் நெடுஞ்சாலை 205யை ஒட்டி அமைந்துள்ளது என்றால் சரிதான். கோ.சா.ஆ.9ல் குறிப்பிடப்பட்டுள்ள நிலம் தான் கோருனரின் நிலம் என்றால் சரிதான். அது நிலம் எடுப்பு நடவடிக்கையில் நீள வாக்கில் இரண்டாக பிரிக்கிறது என்றால் சரிதான். கிரேஸ் மருத்துவமனை பெண்கள் மற்றும் குழந்தை நல மருத்துவமனையாக ஆரம்பித்து 16 ஆண்டுகளுக்கு பிறகு எதிர்மனுதாரர் ஒரு செண்டிற்கு ரூ.670/- வீதம் நிர்ணயம் செய்துள்ளார் என்றால் சரிதான். 1986ல்கோருனர் ஒரு

செண்டிற்கு ரூ.1,750/-வீதம் கொடுத்து கிரையம் பெற்ற தொகையை விட நாங்கள் 2002 ல் ரூ.1080/- யை குறைவாக நிர்ணயித்துள்ளோம் என்றால் கோருனர் கிரையம் பெற்ற தொகை தெரியாது. ஆனால் ஒரு செண்டிற்கு ரூ.670/- வீதம் நிர்ணயம் செய்யப்பட்டது.

(இந்நிலையில் கோருனர் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)